கவனிக்க.- இந்த வர்த்தமானியின் ஆங்கில மற்றும் சிங்கள மொழிப் பிரதிகள் வெவ்வேறாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1942/23 - 2015 නොවැම්බර් මස 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.11.26

1942/23 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்

1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்

பிரிவு 4(2) இன் கீழான பிரசுரிப்பு

இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு (இதன் பின்னர் "நிறுவகம்"- என குறிப்பிடப்படும்) வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 1995 ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத் தேவைகளுக்காக இத்துடன் பிரசுரித்துள்ள 2015 சனவரி 1 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கான மாற்றங்களை கடைப்பிடித்துள்ளது. இந்தமாற்றங்கள் இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டு சனவரி மாதம் முதலாம் திகதி அல்லதுஅதற்குப் பின்னர் ஆரம்பமாகும் காலத்தை அடக்கும் நிதிக்கூற்றுக்களுக்கு நடைமுறைக்கு வருகின்றது.

பேரவையின் கட்டளைப்படி,

அருணஅல்விஸ்,
செயலாளர்.

இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம்
இல. : 30 A,
மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07.
2015, நவம்பர் 26 ஆந் திகதி.

1APG2708 (2016/ 03)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

2015 சனவரி 1 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருகின்ற இலங்கைக் கணக்கீட்டு நியமங்களில் மாற்றங்கள்

உள்ளடக்கம்

[1] நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் முன்னிலைப்படுத்தலுக்கான வேலைச் சட்டகம்

[2] SLFRS 1 - இலங்கைக் கணக்கீட்டு நியமங்களை முதற்தடவையாக கடைப்பிடித்தல்

[3] SLFRS 2 - பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு

[4] SLFRS 3 - வியாபார இணைப்புக்கள்

[5] SLFRS 4 - காப்புறுதி ஒப்பந்தங்கள்

[6] SLFRS 5 - விற்பனைக்காக வைத்திருக்கும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட தொழிற்பாடுகள்

[7] SLFRS 6 - கனிப்பொருள் வளங்களின் அகழ்வாய்வும் மதிப்பாய்வும்

[8] SLFRS 7 - நிதிச் சாதனங்கள்: வெளிக்காட்டல்கள்

[9] SLFRS 8 - தொழிற்பாட்டுப் பிரிவுகள்

[10] SLFRS 10 - ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்

[11] SLFRS 11 - கூட்டு ஏற்பாடுகள்

[12] SLFRS 12 - பிற உரிமங்களில் நாட்டங்களை வெளிக்காட்டல்

[13] SLFRS 13 - சீர்மதிப்பு அளவீடு

[14] LKAS 1 - நிதிக்கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல்

[15] LKAS 2 - தொக்குகள்

[16] LKAS 7 - காசுப்பாய்வுக் கூற்று

[17] LKAS 8 - கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்

[18] LKAS 10 - அறிக்கையிடற் காலத்திற்குப் பிந்திய நிகழ்வுகள்

[19] LKAS 11 - நிருமாண ஒப்பந்தங்கள்

[20] LKAS 12 - வருமான வரிகள்

[21] LKAS 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

[22] LKAS 17 - குத்தகைகள்

[23] LKAS 18 - வருமானம்

[24] LKAS 19 - ஊழியர் பயன்கள்

[25] LKAS 20 - அரச கொடைகளுக்கான கணக்கீடும் அரச உதவிகளின் வெளிக்காட்டலும்

[26] LKAS 21 - அந்நிய நாணயமாற்று வீதங்களில் மாற்றங்களின் தாக்கங்கள்

[27] LKAS 23 - கடன்படுகைக் கிரயங்கள்

[28] LKAS 24 - உறவுமுறைத் தரப்பினரின் வெளிக்காட்டல்கள்

[29] LKAS 26 - ஓய்வுப் பயன் திட்டங்களின் கணக்கீடும் அறிக்கையிடலும்

[30] LKAS 27 - வேறான நிதிக்கூற்றுக்கள்

[31] LKAS 28 - கூட்டுக் கம்பனிகள் மற்றும் கூட்டுத் தொழில்முயற்சிகளில் முதலீடுகள்

[32] LKAS 29 - மிகைப் பணவீக்க பொருளாதாரங்களில் நிதியறிக்கையிடல்

[33] LKAS 32 - நிதிச் சாதனங்கள்: முன்னிலைப்படுத்தல்

[34] LKAS 33 - பங்கொன்றிற்கான வருவாய்

[35] LKAS 34 - இடைக்கால நிதியறிக்கையிடல்

[36] LKAS 36 - சொத்துக்களின் சேத இழப்பு

[37] LKAS 37 - ஏற்பாடுகள், உறுமுரிமைப் பரிப்புக்கள் மற்றும் உறுமுரிமைச் சொத்துக்கள்

[38] LKAS 38 - அருவச் சொத்துக்கள்

[39] LKAS 39 - நிதிச் சாதனங்கள்: ஏற்பிசைவும் அளவீடும்

[40] LKAS 40 - முதலீட்டு ஆதனம்

[41] LKAS 41 - விவசாயம்

நிதியறிக்கையிடலுக்கான கோட்பாட்டு வேலைச் சட்டகம்

மாற்றம் எதுவும் இல்லை

LKAS 1– நிதிக்கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல்

பந்தி 69 (d)	அது அறிக்கையிடற் காலத்திற்கு குறைந்தபட்சம் பன்னிரண்டு மாதங்களின் பின்னர் காசு அல்லது ஏனைய சொத்துக்களை மாற்றுவதன் மூலம் பரிப்பை தீர்த்தலை பிற்போடும் உரிமையை அறிக்கையிடற் திகதியில் கொண்டிருக்க மாட்டாது (பந்தி 73 ஐப் பார்க்க). பதிற்தரப்பினரின் தேர்வுரிமையின்படி தீர்ப்பனவு உரிமையாண்மைச் சாதனங்களை வழங்குவதன் மூலம் விளைவிக்கப்படக்கூடிய பரிப்பின் கட்டுறுப்புக்கள் அதன் வகைப்படுத்தலை பாதிக்காது.

LKAS 2 - தொக்குகள்

மாற்றம் எதுவும் இல்லை

LKAS 7 - காசுப்பாய்வுக் கூற்று

மாற்றம் எதுவும் இல்லை

LKAS 8 - கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்

மாற்றம் எதுவும் இல்லை

LKAS 10 - அறிக்கையிடற் காலத்திற்குப் பிந்திய நிகழ்வுகள்

மாற்றம் எதுவும் இல்லை

LKAS 11 - நிருமாண ஒப்பந்தங்கள்

மாற்றம் எதுவும் இல்லை

LKAS 12 - வருமான வரிகள்

மாற்றம் எதுவும் இல்லை

LKAS 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

பந்தி 35	ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படியொன்று மீள்மதிப்பீடு செய்யப்படும்போது அச் சொத்தின் முன்கொணரற் தொகையானது அந்த மீள்மதிப்புத் தொகைக்கு செம்மையாக்கம் செய்யப்படும். மீள்மதிப்புத் திகதியில் சொத்து கீழ்வரும் ஒரு முறையில் கையாளப்படும்: (a) மொத்த முன்கொணரற் தொகை, சொத்தின் முன்கொணரற் தொகைக்கு இசைவாக இருக்கும் வண்ணம் செம்மையாக்கப்படும். உதாரணமாக, மொத்த முன்கொணரற் தொகையானது அவதானிக்கக்கூடிய சந்தைத் தரவுகள் தொடர்பில் அல்லது முன் கொணரற் தொகையில் ஏற்பட்ட மாற்றத்திற்கு விகிதாசாரமாக திருத்திக் கூறப்படும். மீள்மதிப்புத் திகதியில் திரள் தேய்மானம், மொத்த முன்கொணரற் தொகைக்கும் திரள் சேதஇழப்பு நட்டங்கள் கணக்கிற்கொண்டபின் சொத்தின் முன்கொணரற் தொகைக்கும் இடையிலான வித்தியாசத்திற்கு சமப்படுத்தும் வகையில் செம்மையாக்கப்படும். அல்லது (b) திரள்தேய்மானம் சொத்தின் மொத்த முன்கொணரற் தொகைக்கு எதிராக நீக்கப்படும். திரள்தேய்மான செம்மையாக்கற் தொகையானது, பந்திகள் 39 மற்றும் 40 இற்கு அமைவாக கணக்கிற் கொள்ளப்பட்டமுன்கொணரற் தொகையில் அதிகரிப்பின் அல்லது வீழ்ச்சியின் பகுதியாக அமையும்.

80A	SLFRS களுக்கான வருடாந்த மேம்படுத்தல்கள் 2014 இனால் பந்தி 35 திருத்தப்பட்டுள்ளது. ஒரு உரிமம் இந்தத் திருத்தத்தை, திருத்தத்தின் ஆரம்ப பிரயோகத் திகதியில் அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த காலங்கள் மற்றும் அதற்கு உடனடியாக முந்திய வருடாந்த காலத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட சகல மீள்மதிப்பீடுகளுக்கும் பிரயோகிக்கும். அத்துடன், முன்னிலைப்படுத்தப்படும் எந்தவொரு முந்திய காலத்திற்கும், தேவைப்படுத்தப்படாதபோதிலும், செம்மையாக்கப்பட்ட ஒப்பீட்டுத் தகவல்களை முன்னிலைப்படுத்தலாம். உரிமமொன்று எந்தவொரு முன்னைய காலத்திற்கும் செம்மையாக்கப்படாத ஒப்பீட்டுத் தகவல்களை முன்னிலைப்படுத்துமேயாகில், செம்மையாக்கப்படாத தகவல்களை தெளிவாக இனங்கண்டு, அது வேறான அடிப்படையில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்து, அந்த அடிப்படையை விபரித்தல் வேண்டும்.
81H	2014 செப்டம்பரில் வழங்கிய SLFRS களுக்கான வருடாந்த மேம்படுத்தல்கள் 2014 பந்தி 35 ஐ திருத்தியும் பந்தி 80A ஐச் சேர்த்தும் உள்ளது. உரிமங்கள் அந்தத் திருத்தத்தை 2014 ஜூலை 1ந் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் வருடாந்த காலங்களுக்கு பிரயோகிக்கும். முந்திய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் இந்த திருத்தத்தை முந்திய காலமொன்றிற்கு பிரயோகிக்கும் பட்சத்தில் அந்த உண்மை வெளிக்காட்டப்படும்.

LKAS 17 - குத்தகைகள்

மாற்றம் எதுவும் இல்லை

LKAS 18 - வருமானம்

மாற்றம் எதுவும் இல்லை

LKAS 19 - ஊழியர் பயன்கள்

பந்தி 93	திட்டத்தின் முறையான கட்டுறுப்புக்களில் குறிப்பிட்ட ஊழியரிடமிருந்தான அல்லது மூன்றாம் தரப்பினரிடமிருந்தான பங்களிப்புக்கள் ஒன்றில் சேவைக் கிரயத்தை குறைக்கும் (சேவைக்கு அவை இணைக்கப்பட்டிருப்பின்) அல்லது நிகர வரையறுக்கப்பட்ட பயன் பரிப்பின் (சொத்தின்) மீள்அளவீடுகளை பாதிக்கும் (அவை சேவைக்கு இணைக்கப்படாதிருப்பின்). சேவைக்கு இணைக்கப்படாத பங்களிப்பிற்கு உதாரணம், திட்டத்தின் சொத்துக்களின் இழப்புக்களினால் அல்லது ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டிலிருந்து ஏற்படும் பற்றாக்குறையை குறைப்பதற்கு பங்களிப்புக்கள் தேவைப்படுதல். ஊழியரிடமிருந்தான அல்லது மூன்றாம் தரப்பினரிடமிருந்து பங்களிப்புக்கள் சேவைக்கு இணைக்கப்பட்டிருப்பின், அப் பங்களிப்புக்கள் சேவைக்கிரயத்தை கீழ்வருமாறு குறைக்கும்: (a) பங்களிப்புத் தொகை சேவை ஆண்டுகளின் எண்ணிக்கையில் தங்கியிருப்பின், உரிமம் அந்தப் பங்களிப்புக்களை, மொத்தப் பயனுக்காக பந்தி 70 இல் தேவைப்படுத்திய அதே ஒதுக்க முறையை பயன்படுத்தி சேவைக் காலங்களுக்கு ஒதுக்கும். (அதாவது, ஒன்றில் திட்டத்தின் பங்களிப்புச் சூத்திரம் அல்லது நேர்கோட்டு அடிப்படையை பயன்படுத்தி); அல்லது (b) பங்களிப்புக்களின் தொகை சேவை ஆண்டுகளின் எண்ணிக்கையில் தங்கியிராவிடில், உரிமம் அத்தகைய பங்களிப்புக்களை தொடர்புபட்ட சேவை வழங்கப்பட்ட காலத்தில் சேவைக் கிரயத்தில் ஒரு கழிப்பனவாக ஏற்பிசைவு செய்ய அனுமதிக்கப்படும். சேவை ஆண்டுகளின் எண்ணிக்கையில் தங்கியிராத பங்களிப்புக்களுக்கான உதாரணங்கள் ஊழியர் சம்பளத்தின் நிலையான சதவீதமாக, சேவைக்காலம் முழுவதும் நிலையான தொகையாக அல்லது ஊழியர் வயதில் தங்கியிராத பங்களிப்புக்களை உள்ளடக்கும். தொடர்புபட்ட பிரயோக வழிகாட்டல்களை பந்தி A1 வழங்குகின்றது.

94	பந்தி 93(a) இற்கு அமைய சேவைக் காலத்துடன் தொடர்புபட்ட ஊழியர்களிடமிருந்து அல்லது மூன்றாம் தரப்பினரிடமிருந்து பெறப்படும் பங்களிப்புக்களை பொறுத்தமட்டில் பங்களிப்புகளில் மாற்றங்கள் கீழ்வருவனவற்றை விளைவிக்கும்: (a) நடப்பு அல்லது கடந்த கால சேவைக் கிரயத்தை (அந்த மாற்றங்கள் திட்டத்தின் முறையான கட்டுறுப்புக்களில் குறிப்பிடப்படாததும், ஆக்கபூர்வமான கடப்பாட்டிலிருந்து ஏற்படாததாகவும் இருப்பின்)/அல்லது (b) ஆயுட்காலமுறைக் கணிப்பீட்டு இலாபம் அல்லது நட்டத்தை (அந்த மாற்றங்கள் திட்டத்தின் முறையான கட்டுறுப்புக்களில் குறிப்பிடப்பட்டதாக் அல்லது ஆக்கபூர்வமான ஒரு கடப்பாட்டில் இருந்து ஏற்படாததாக இருப்பின்).
175	2014 செப்டம்பரில் வழங்கிய வரையறுக்கப்பட்ட பயன் திட்டங்கள்: ஊழியர் பங்களிப்புக்கள் (LKAS 19 இற்கு திருத்தங்கள்) பந்திகள் 93-94 ஐ திருத்தியுள்ளது. உரிமமொன்று அந்த திருத்தங்களை 2014 ஜூலை 1 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த காலங்களுக்கு LKAS 8 கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் எனும் நியமத்திற்கு அமைய முன்பிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பிரயோகிக்கும். முந்திய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் இந்த திருத்தத்தை முந்திய காலமொன்றிற்கு பிரயோகிக்கும் பட்சத்தில் அந்த உண்மை வெளிக்காட்டப்படும்.

பின்னிணைப்பு A

பிரயோக வழிகாட்டி

இந்தப் பின்னிணைப்பு SLFRS இன் ஒன்றித்த பகுதியாகும். இது பந்திகள் 92-93 இன் பிரயோகத்தை விபரிப்பதுடன், SLFRS இன் ஏனைய பகுதிகளைப் போன்று அதே அதிகாரத்தை கொண்டுள்ளது.

A1 ஊழியர்களிடமிருந்து அல்லது மூன்றாம் தரப்பினரிடமிருந்து பெறப்படும் பங்களிப்புக்களின் கணக்கீட்டுத் தேவைப்பாடுகள் கீழே உள்ள படத்தில் விபரிக்கப்பட்டுள்ளது:



(1) புள்ளிக் கோடிட்ட அம்புக்குறி உரிமம் தரப்பட்டுள்ள இரண்டில் ஒன்றை தெரிவு செய்வதற்கு அனுமதிக்கப் பட்டுள்ளதை குறிக்கின்றது.

LKAS 20 - அரச கொடைகளுக்கான கணக்கீடும் அரச உதவிகளின் வெளிக்காட்டலும்

மாற்றம் எதுவும் இல்லை

LKAS 21 - அந்நிய நாணயமாற்று வீதங்களில் மாற்றங்களின் தாக்கங்கள்

மாற்றம் எதுவும் இல்லை

LKAS 23 - கடன்படுகைக் கிரயங்கள்

மாற்றம் எதுவும் இல்லை

LKAS 24 - உறவுமுறைத் தரப்பினரின் வெளிக்காட்டல்கள்

9 (b) (viii)	அறிக்கையிடும் உரிமத்திற்கு அல்லது அறிக்கையிடும் உரிமத்தின் மேன்னிலை உரிமத்திற்கு பிரதான முகாமை ஆளணிச் சேவைகளை வழங்குகின்ற, அதன் பகுதியாக அமைந்த உரிமம் அல்லது குழுமத்தின் எந்தவொரு அங்கத்தவர்
17A	ஒரு உரிமம் வேறொரு உரிமத்திடமிருந்து (முகாமை உரிமம்) பிரதான முகாமை ஆளணிச் சேவைகளை பெறுமேயாகில், முகாமை உரிமத்தால் முகாமை உரிமத்தின்ஊழியர்களுக்கு அல்லது பணிப்பாளர்களுக்கு செலுத்திய அல்லது செலுத்தவேண்டிய இழப்பீட்டிற்கான பந்தி 17 இலுள்ள தேவைப்பாடுகளை பிரயோகிக்க வேண்டிய தேவையில்லை.
18A	வேறுபட்ட முகாமை உரிமத்தினால் வழங்கப்படும் பிரதான முகாமை ஆளணிச் சேவைகளுக்கு உரிமத்தால் இறுக்கப்பட்ட தொகைகள் வெளிக்காட்டப்படும்.
28C	2014 செப்டம்பரில் வழங்கப்பட்ட SLFRS களுக்கான வருடாந்த மேம்படுத்தல்கள் 2014, பந்தி 9 ஐ திருத்தியும் பந்திகள் 17A மற்றும் 18A ஆகியவற்றை சேர்த்தும் உள்ளது. உரிமமொன்று அந்தத் திருத்தத்தை 2014 ஜூலை 1 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் வருடாந்த காலங்களுக்கு பிரயோகிக்கும். முந்திய பிரயோகம் அனுமதிக்கப்பட்டு உள்ளது. ஒரு உரிமம் அந்தத் திருத்தத்தை முந்திய காலத்திற்கு பிரயோகிக்குமிடத்து அந்த உண்மை வெளிக்காட்டப்படும்.

LKAS 26 - ஓய்வுப் பயன் திட்டங்களின் கணக்கீடும் அறிக்கையிடலும்

மாற்றம் எதுவும் இல்லை

LKAS 27 - வேறான நிதிக்கூற்றுக்கள்

மாற்றம் எதுவும் இல்லை

LKAS 28 - கூட்டுக் கம்பனிகள் மற்றும் கூட்டுத் தொழில்முயற்சிகளில் முதலீடுகள்

மாற்றம் எதுவும் இல்லை

LKAS 29 - மிகைப் பணவீக்க பொருளாதாரங்களில் நிதியறிக்கையிடல்

மாற்றம் எதுவும் இல்லை

LKAS 32 - நிதிச் சாதனங்கள்: முன்னிலைப்படுத்தல்

மாற்றம் எதுவும் இல்லை

LKAS 33 - பங்கொன்றிற்கான வருவாய்

மாற்றம் எதுவும் இல்லை

LKAS 34 - இடைக்கால நிதியறிக்கையிடல்

மாற்றம் எதுவும் இல்லை

LKAS 36 - சொத்துக்களின் சேத இழப்பு

மாற்றம் எதுவும் இல்லை

LKAS 37 - ஏற்பாடுகள், உறுமுரிமைப் பரிப்புக்கள் மற்றும் உறுமுரிமைச் சொத்துக்கள்

5(f)	ஒரு வியாபார இணைப்பில் சுவீகரிப்பாளனின் உறுமுரிமைக் கவனத்திற் கொள்ளல் (SLFRS 3 வியாபார இணைப்பைப் பார்க்கவும்)
99	2014 செப்டம்பரில் வழங்கப்பட்ட SLFRS களுக்கான வருடாந்த மேம்படுத்தல்கள் 2014, பந்தி 5 ஐ SLFRS 3 இற்கு திருத்தம் காரணமாக திருத்தியுள்ளது. ஒரு உரிமம் அந்தத் திருத்தத்தை SLFRS 3 இற்கான திருத்தம் பிரயோகிக்கப்படும் வியாபார இணைப்புக்களுக்கு அதன் பின்னர் நடைமுறைக்கு வரும் வகையில் பிரயோகிக்கும்.

LKAS 38 - அருவச் சொத்துக்கள்

80	அருவச் சொத்தொன்று மீள்மதிப்பிடப்படும்போது அந்தச் சொத்தின் முன்கொணரற் தொகை மீள் மதிப்புத் தொகைக்கு செம்மையாக்கப்படும். மீள்மதிப்பீட்டுத் திகதியில் அந்தச் சொத்து கீழ்வரும் ஒரு முறையில் கையாளப்படும்: (a) மொத்த முன்கொணரற் தொகை, சொத்தின் முன்கொணரற் தொகையின் மீள்மதிப்பீட்டிற்கு இசைவான ஒரு வழியில் செம்மையாக்கம் செய்யப்படும். உதாரணமாக, மொத்த முன் கொணரற் தொகை அவதானிக்கக்கூடிய சந்தைத் தரவுகள் தொடர்பில் மீளக்கூறப்படலாம் அல்லது முன்கொணரற் தொகையில் மாற்றத்திற்கு விகிதாசாரமாக மீளக்கூறப்படலாம். மீள் மதிப்பீட்டுத் திகதியில் திரள் காலத்தேய்மானம், திரள் சேதஇழப்பு நட்டங்களை கணக்கிற் கொண்டபின் மொத்த முன்கொணரற் தொகைக்கும் சொத்தின் முன்கொணரற் தொகைக்கும் இடையிலான வித்தியாசத்திற்கு சமமாக செம்மையாக்கம் செய்யப்படும்; அல்லது (b) திரள் காலத்தேய்மானம் சொத்தின் மொத்த முன்கொணரற்தொகைக்கு எதிராக நீக்கப்படும். திரள் காலத்தேய்மானத்தின் செம்மையாக்கற் தொகையானது, பந்திகள் 85 மற்றும் 86 இற்கு அமைய கணக்கிற்கொண்ட முன்கொணரற் தொகையில் அதிகரிப்பின் அல்லது வீழ்ச்சியின் பகுதியாக அமையும்.
130H	2014 செப்டம்பரில் வழங்கிய SLFRS களுக்கான வருடாந்த மேம்படுத்தல் 2014, பந்தி 80 ஐத் திருத்தி உள்ளது. உரிமமொன்று அந்தத் திருத்தத்தை 2014 ஜூலை 1ந் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் வருடாந்த காலங்களுக்கு பிரயோகிக்கும். முந்திய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஒரு உரிமம் அந்தத் திருத்தத்தை முந்திய காலத்திற்கு பிரயோகிக்குமிடத்து அந்த உண்மை வெளிக்காட்டப்படும்.
130I	ஒரு உரிமம் SLFRS களுக்கான வருடாந்த மேம்படுத்தல் 2014, ஏற்படுத்திய திருத்தத்தை, ஆரம்ப பிரயோகத் திகதியில் அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த காலங்கள் மற்றும் அதற்கு உடனடியாக முந்திய வருடாந்த காலத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட சகல மீள்மதிப்பீடுகளுக்கும் பிரயோகிக்கும். அத்துடன், முன்னிலைப்படுத்தப்படும் எந்தவொரு முந்திய காலத்திற்கும், தேவைப்படுத்தப்படாதபோதிலும், செம்மையாக்கப்பட்ட ஒப்பீட்டுத் தகவல்களை முன்னிலைப்படுத்தலாம். உரிமம் எந்தவொரு முன்னைய காலத்திற்கும் செம்மையாக்கப்படாத ஒப்பீட்டுத் தகவல்களை முன்னிலைப்படுத்துமேயாகில், செம்மையாக்கப்படாத தகவல்களை தெளிவாக இனங்கண்டு, அது வேறான அடிப்படையில் முன்னிலைப்படுத்தப்பட்டு உள்ளதாக தெரிவித்து, அந்த அடிப்படையை விபரித்தல் வேண்டும்.

LKAS 39 - *நிதிச் சாதனங்கள்: ஏற்பிசைவும் அளவீடும்*

9(aa)	**SLFRS 3 வியாபார இணைப்புக்கள் நியமம் பிரயோகிக்கப்படுவது, வியாபார இணைப்பொன்றில் சுவீகரிப்பாளனின் உறுமுரிமை கருத்திற் கொள்ளல்களுக்காகும்.**
108F	2014 செப்டம்பரில் வழங்கப்பட்ட SLFRS களுக்கான வருடாந்த மேம்படுத்தல்கள் 2014, பந்தி 9 ஐ SLFRS 3 இற்கு திருத்தம் காரணமாக திருத்தியுள்ளது. ஒரு உரிமம் அந்தத் திருத்தத்தை SLFRS 3 இற்கான திருத்தம் பிரயோகிக்கப்படும் வியாபார இணைப்புக்களுக்கு அதன்பின்னர் நடைமுறைக்கு வரும் வகையில் பிரயோகிக்கும்.
AG34	பந்தி 14 இலுள்ள தத்துவத்தின் விளைவாக ஒரு உரிமம் உய்த்தறி சாதனங்களின்கீழ் அதன் சகல ஒப்பந்தரீதியான உரிமைகள் மற்றும் கடப்பாடுகளை, நிதிச்சொத்துக்களின் மாற்றல்களை, விற்பனையாக கணக்கிற் கொள்வதை தடைசெய்யும் உய்த்தறிசாதனங்கள் தவிர, உரியவாறு சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களாக அதன் நிதிநிலைக்கூற்றில் ஏற்பிசைவுசெய்யும் (பந்தி AG49 ஐப் பார்க்கவும்). நிதிச்சொத்தொன்றின் மாற்றல் ஏற்பிசைவு விலக்கலுக்கு தகைமை பெறாத இடத்து, மாற்றத்தை பெறுபவர் அந்த மாற்றப்பட்ட சொத்தை அதன் சொத்தாக ஏற்பிசைவு செய்ய மாட்டாது (பார்க்க பந்தி AG50).
AG35	பந்தி 14 இலுள்ள தத்துவத்தினை பிரயோகிப்பதற்கு கீழ்வருவன உதாரணங்களாகும்: (a) உரிமம் ஒப்பந்தத்திற்கு ஒரு தரப்பினராக இருந்து அதன் காரணமாக பெறுவதற்கான சட்டரீதியான உரிமையை அல்லது பணம் செலுத்துவதற்கான சட்டரீதியான கடப்பாட்டை கொண்டுள்ளபோது நிபந்தனையற்ற வருமதிகள் மற்றும் சென்மதிகள் சொத்துக்களாக அல்லது பரிப்புக்களாக ஏற்பிசைவு செய்யப்படும். (b) பொருட்கள், சேவைகளை கொள்வனவு செய்வதற்கான அல்லது விற்பனை செய்வதற்கான உரிமமொன்றின் உறுதியான கடமைப்பாட்டின் விளைவாக சுவீகரிக்கப்பட வேண்டிய சொத்துக்கள் மற்றும் இறுக்கப்படவேண்டிய பரிப்புக்கள், பொதுவாக குறைந்தபட்சம் ஒரு தரப்பினர் உடன்படிக்கையின் பிரகாரம் தமது கடப்பாட்டை செய்யும்வரையில் ஏற்பிசைவு செய்யப்படுவதில்லை. உதாரணமாக, ஒரு உறுதியான கட்டளையை பெறுகின்ற உரிமம் பொதுவாக அந்தக் கடமைப்பாட்டை பெறுகின்றபோது சொத்தொன்றை ஏற்பிசைவு செய்யாது (கட்டளையை இடுகின்ற உரிமம் பரிப்பை ஏற்பிசைவு செய்யாது), கட்டளை இடப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகள் அனுப்பப்படும், விநியோகிக்கப்படும் அல்லது வழங்கப்படும் வரையில் ஏற்பிசைவைத் தாமதப்படுத்தும். நிதிசாராத உருப்படிகளை வாங்குவதற்கான அல்லது விற்பதற்கான உறுதியான கடமைப்பாடு பந்திகள் 5-7 இன் கீழ் இந்த நியமத்தின் நோக்கெல்லைக்கு உட்பட்டிருப்பின், கடமைப்பாட்டுத் திகதியில் அதன் நிகர சீர்மதிப்பு சொத்தாக அல்லது பரிப்பாக ஏற்பிசைவு செய்யப்படும் (கீழே (c) ஐப் பார்க்க). அத்துடன் முன்னர் ஏற்பிசைவு செய்யப்படாத ஒரு உறுதியான கடமைப்பாடு ஒரு சீர்மதிப்புத் தளம்பற் காப்பில் தளம்பற்காப்பு செய்யப்பட்ட உருப்படியாக வகைப்படுத்தப்பட்டால், தளம்பற்காப்பு செய்யப்பட்ட இடர் தொடர்புபட்ட நிகர சீர்மதிப்பில் எந்தவொரு மாற்றமும் தளம்பற்காப்பின் ஆரம்பத்தின் பின்னர் ஒரு சொத்தாக அல்லது பரிப்பாக ஏற்பிசைவு செய்யப்படும் (பந்திகள் 93 மற்றும் 94 ஐப் பார்க்க). (c) இந்த நியமத்தின் நோக்கெல்லைக்கு உட்பட்ட முன்னாற்று ஒப்பந்தமொன்று (பார்க்க பந்திகள் 2-7) தீர்ப்பனவு இடம்பெறுகின்ற தினத்தில் அல்லாது கடமைப்பட்ட திகதியில் ஒரு சொத்தாக அல்லது பரிப்பாக ஏற்பிசைவு செய்யப்படும். உரிமம் முன்னாற்று ஒப்பந்தம் ஒன்றிற்கு ஒரு தரப்பினராக வரும்போது, உரிமை மற்றும் கடப்பாட்டின் சீர்மதிப்புக்கள், முன்னாற்றின் நிகர சீர்மதிப்பு பூஜ்யமாகும் வகையில், ஒன்றிற்கொன்று சமனாகும். உரிமை மற்றும் கடப்பாட்டின் நிகர சீர்மதிப்பு பூஜ்யமாகாதபோது, அந்த ஒப்பந்தம் ஒரு சொத்தாக அல்லது பரிப்பாக ஏற்பிசைவு செய்யப்படும். (d) இந்த நியமத்தின் நோக்கெல்லைக்கு உட்பட்டுள்ள தேர்வுரிமை ஒப்பந்தங்கள் (option contracts) (பார்க்க பந்திகள் 2-7) அதன் கொள்ளுநர் அல்லது எழுதுநர் ஒப்பந்தத்தின் ஒரு தரப்பினராக வரும்போது ஒரு சொத்தாக அல்லது பரிப்பாக ஏற்பிசைவு செய்யப்படும். (e) திட்டமிட்ட எதிர்கால ஊடுசெயல்கள், எந்தளவுக்கு சாத்தியமானதாக இருந்தபோதிலும், உரிமம் ஒப்பந்தத்திற்கு ஒரு தரப்பாக மாறாத காரணத்தினால், சொத்துக்களோ அல்லது பரிப்புக்களோ அல்ல.

LKAS 40 - முதலீட்டு ஆதனம்

பந்தி 14A	ஒரு முதலீட்டு ஆதன கொள்வனவு சொத்தொன்றின் அல்லது சொத்துக்களின் குழுமமொன்றின் அல்லது SLFRS 3 இன் நோக்கெல்லைக்கு உட்பட்ட வியாபார இணைப்பின் கொள்வனவா என தீர்மானிப்பதற்கு சுயதீர்மானமும் தேவைப்படும். இது வியாபார இணைப்பா என்பதை தீர்மானிப்பதற்கு SLFRS 3 ஐ தொடர்புபடுத்தல் வேண்டும். இந்த நியமத்தின் பந்திகள் 7-14 இல் தெரிவிக்கப்பட்டவை, கொள்வனவு செய்த ஆதனம் SLFRS 3 இல் பொருள் வரையறை செய்யப்பட்டவாறு வியாபார இணைப்பா இல்லையா என்பதை தீர்மானிக்க அல்லாது, ஆதனம் ஒரு உரிமையாளர் குடியிருக்கும் ஆதனமா அல்லது முதலீட்டு ஆதனமா என்பதை தீர்மானிப்பதுடன் தொடர்புபட்டதாகும். ஒரு குறித்த ஊடுசெயல் SLFRS 3 இல் பொருள் வரையறை செய்தவாறு வியாபார இணைப்பின் பொருள் வரையறையை நிறைவு செய்கின்றதா எனவும், இந்த நியமத்தில் பொருள்வரையறை செய்தவாறு முதலீட்டு ஆதனத்தை உட்படுத்துகிறதா எனவும் தீர்மானிப்பதற்கு இரு நியமங்களும் வெவ்வேறாக பிரயோகிக்கப்படல் வேண்டும்.
84A	2014 செப்டம்பரில் வழங்கப்பட்ட SLFRS களுக்கான வருடாந்த மேம்படுத்தல்கள் 2014, பந்தி 14A ஐயும் பந்தி 6 இற்கு முன்னர் தலைப்பொன்றையும் சேர்த்துள்ளது. உரிமமொன்று அந்தத் திருத்தத்தை முதற்தடவையாக பிரயோகிக்கும் காலத்தின் ஆரம்பத்திலிருந்து அந்தத் திருத்தத்தை பிரயோகிக்கும். அதன் தொடர்விளைவாக முந்திய காலங்களில் முதலீட்டு ஆதனங்களின் கொள்வனவிற்கான கணக்கீடு திருத்தப்பட மாட்டாது. எனினும், முந்திய கால ஊடுசெயல்களுக்கு திருத்தத்தை பிரயோகிப்பதற்கு தேவையான தகவல்கள் உரிமத்திற்கு கிடைத்தால் மாத்திரமே, நடைமுறைக்கு வரும் திகதியில் அல்லது அதற்குப் பின்னர் நிகழும் முதலாவது வருடாந்த காலத்திற்கு முன்னர் இடம்பெற்ற முதலீட்டு ஆதனங்களின் தனித்தனிக் கொள்வனவுகளுக்கு உரிமம் இந்த திருத்தத்தை பிரயோகிப்பதற்கு தெரிவு செய்யலாம்.
85D	2014 செப்டம்பரில் வழங்கப்பட்ட SLFRS களுக்கான வருடாந்த மேம்படுத்தல்கள் 2014, பந்தி 6 இற்கு முன்னரும் பந்தி 84 இற்கு பின்னரும் தலைப்புக்களையும், பந்திகள் 14A மற்றும் 84A ஐயும் சேர்த்துள்ளது. உரிமமொன்று அந்தத் திருத்தத்தை 2014 ஜூலை 1 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் வருடாந்த காலங்களுக்கு பிரயோகிக்கும். முந்திய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஒரு உரிமம் அந்தத் திருத்தத்தை முந்திய காலத்திற்கு பிரயோகிக்குமிடத்து அந்த உண்மை வெளிக்காட்டப்படும்.

LKAS 41 - விவசாயம்

மாற்றம் எதுவும் இல்லை

SLFRS 1 - இலங்கைக் கணக்கீட்டு நியமங்களை முதற்தடவையாக கடைப்பிடித்தல்

B7(b)	உபகம்பனிமீது கட்டுப்பாட்டு இழப்பை விளைவிக்காத மேன்னிலைக் கம்பனியின் உரிமைத்துவ நாட்டத்தில் மாற்றங்களின் கணக்கீட்டிற்கான, பந்திகள் 23 மற்றும் B96 இன் தேவைப்பாடுகள்.

SLFRS 2 - பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு

63B	2014 செப்டம்பரில் வழங்கப்பட்ட SLFRS களுக்கான வருடாந்த மேம்படுத்தல்கள் 2014, பந்திகள் 15 மற்றும் 19 ஐ திருத்தியுள்ளது. பின்னிணைப்பு A யில் 'அளித்தலிற்கான நிபந்தனைகள்' (vesting conditions) மற்றும் 'சந்தைப் புறநிலை' (market condition) ஆகியவற்றின் பொருள் வரையறைகள் திருத்தப்பட்டும், 'செயற்பாட்டு நிபந்தனை' மற்றும் 'சேவை நிபந்தனை' ஆகிய பதங்களின் பொருள் வரையறைகள் சேர்க்கப்பட்டும் உள்ளன. அளிப்புத் திகதி 2014 ஜூலை 1 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னரான பங்கு அடிப்படைக் கொடுப்பனவு ஊடுசெயல்களுக்கு உரிமம் அந்தத் திருத்தத்தை அதன் பின்னர் நடைமுறைக்கு வரும் வகையில் பிரயோகிக்கும். முந்திய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஒரு உரிமம் அந்தத் திருத்தத்தை முந்திய காலத்திற்கு பிரயோகிக்குமிடத்து அந்த உண்மை வெளிக்காட்டப்படும்.

SLFRS 2– *பின்னிணைப்பு A*

சந்தைப் புறநிலை	கீழ்வருவன போன்ற உரிமத்தின் **உரிமையாண்மை சாதனங்களின்** (அல்லது அதே குழுமத்தைச் சார்ந்த வேறொரு உரிமத்தின் உரிமையாண்மைச் சாதனங்களின் சந்தைவிலையுடன் (அல்லது பெறுமதியுடன்) தொடர்புபட்ட, **உரிமையாண்மைச் சாதனத்தின்** பிரயோகவிலை, அளித்தல் அல்லது பிரயோகித்தற்தகவு தங்கியுள்ள. **செயற்பாட்டுப் புறநிலை**: (a) **பங்குத் தேர்வுரிமை** ஒன்றின் **உள்ளார்ந்த பெறுமதியின்** குறிப்பிட்ட சந்தை விலை குறிப்பிட்ட தொகையை அடைதல்/அல்லது (b) ஏனைய உரிமங்களின் **உரிமையாண்மைச் சாதனங்களின்** சுட்டி அல்லது சந்தை விலைகள் தொடர்புபட்ட உரிமத்தின் **உரிமையாண்மைச் சாதனங்களின்** (அல்லது அதே குழுமம் சார்ந்த வேறொரு உரிமத்தின் உரிமையாண்மைச் சாதனங்களின்) சந்தை விலையின் (அல்லது பெறுமதியின்) அடிப்படையில் அமைந்த குறிப்பிட்ட இலக்கை அடைதல். சந்தைப் புறநிலை பதிற் தரப்பினர் குறிப்பிட்ட காலச் சேவையை பூர்த்திசெய்திருத்தலை தேவைப்படுத்தும் (ஒரு **சேவை நிபந்தனை**) ; சேவைத் தேவைப்பாடு வெளிப்படையாக அல்லது குறித்துணர்த்துவதாக இருக்கலாம்.
செயற்பாட்டு நிபந்தனை	கீழ்வருவனவற்றை தேவைப்படுத்தும் அளித்தலுக்கான நிபந்தனைகள்: (a) பதிற் தரப்பினர் குறிப்பிட்ட காலச் சேவையை பூர்த்திசெய்திருத்தல் (அதாவது ஒரு **சேவை நிபந்தனை);** சேவைத் தேவைப்பாடு வெளிப்படையாக அல்லது குறித்து உணர்த்துவதாக இருக்கலாம். (b) பதிற் தரப்பினர் மேலே (a) இல் தேவைப்படுத்திய சேவையை வழங்கும்போது, அடையவேண்டிய குறிப்பிட்ட செயற்பாட்டு மட்டங்கள். செயற்பாட்டு இலக்குகளை அடைவதற்கான காலம் (காலங்கள்): சேவைக்கால முடிவுக்கு அப்பால் நீடிக்காது; செயற்பாட்டு இலக்குகளின் ஆரம்பத் திகதி கணிசமாக சேவைக்கால ஆரம்பத்திற்கு முன்னதாக அமையாது எனும் நிபந்தனையின்கீழ் சேவைக் காலத்திற்கு முன்னர் ஆரம்பிக்கலாம். செயற்பாட்டு இலக்கு கீழ்வருவன தொடர்பில் பொருள்வரையறை செய்யப்படும்: (a) உரிமத்தின் சொந்தச் செயற்பாடுகளை (அல்லது நடவடிக்கைகள்) அல்லது அதே குழுமத்தைச் சார்ந்த வேறு உரிமத்தின் செயற்பாடுகள் அல்லது நடவடிக்கைகள் (அதாவது சந்தை சாராத நிபந்தனை); அல்லது (b) உரிம உரிமையாண்மைச் சாதனங்களின் அல்லது அதே குழுமம் சார்ந்த வேறு உரிம உரிமையாண்மைச் சாதனங்களின்) விலை அல்லது பெறுமதி (பங்குகள் மற்றும் பங்குத் தேர்வுரிமைகள் அடங்கலாக) (அதாவது **ஒரு சந்தைப் புறநிலை**). ஒரு செயற்பாட்டு இலக்கு ஒன்றில் உரிமத்தின் செயற்பாடுகள் முழுவதும் தொடர்பு பட்டதாக அல்லது ஒரு பிரிவு அல்லது தனியொரு ஊழியர் போன்ற உரிமத்தின் ஒரு பகுதி தொடர்புபட்டதாக இருக்கலாம்.
சேவை நிபந்தனை	உரிமத்திற்கு சேவைகள் வழங்கப்படும் காலத்தின்போது பதிற் தரப்பினர் ஒரு குறிப்பிட்ட கால சேவையை பூர்த்தி செய்திருப்பதை தேவைப்படுத்தும் அளித்தல் நிபந்தனை. பதிற் தரப்பினர் காரணமில்லாது அளித்தற் காலத்தின்போது சேவை வழங்குவதை நிறுத்தினால், அது நிபந்தனையை நிறைவுசெய்வதற்குத் தவறியதாகும். ஒரு சேவை நிபந்தனை செயற்பாட்டு இலக்கை பூர்த்திசெய்வதை தேவைப்படுத்தாது.
அளித்தல் நிபந்தனைகள்	பதிற் தரப்பினருக்கு பங்கு அடிப்படைக் கொடுப்பனவு ஏற்பாட்டின் கீழ் பணம், ஏனைய சொத்துக்கள் அல்லது உரிமத்தின் உரிமையாண்மைச் சாதனங்களை பெறுவதற்கான உரித்தை வழங்கும் சேவைகளை உரிமம் பெறுகின்றதா என்பதை தீர்மானிக்கும் நிபந்தனை. ஒரு அளித்தல் நிபந்தனையானது ஒன்றில் ஒரு சேவை நிபந்தனையாக அல்லது ஒரு செயற்பாட்டு நிபந்தனையாக இருக்கும்.

SLFRS 3 - வியாபார இணைப்புக்கள்

2 (a)	கூட்டு ஏற்பாட்டின் நிதிக்கூற்றுக்களிலேயே கூட்டு ஏற்பாட்டின் ஆக்கத்திற்கான கணக்கீடு.
பந்தி 40	சுவீகரிப்பாளன் நிதிச்சாதனங்களின் பொருள்வரையறையை நிறைவுசெய்யும்,உறுமுரிமைப்பரிப்பை செலுத்துவதற்கான கடப்பாட்டை LKAS 32 நிதிச்சாதனங்கள்: முன்னிலைப்படுத்தல் நியமத்தின் பந்தி 11 இன் அடிப்படையில் ஒரு நிதிப்பரிப்பாக அல்லது உரிமையாண்மைச் சாதனமாக வகைப்படுத்தும். சுவீகரிப்பாளன் முன்னர் மாற்றப்பட்ட பதிலிறுக்கியை மீளப் பெறுவதற்கான உரிமையை, குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை நிறைவுசெய்யும் பட்சத்தில் ஒரு சொத்தாக வகைப்படுத்தும்.உறுமுரிமைப் பதிலிறுக்கிகளின் பின்னைய கணக்கீட்டிற்கான வழிகாட்டலை பந்தி 58 வழங்குகின்றது.
பந்தி 58(b)	கீழே குறிப்பிட்டவாறு அமைந்த உறுமுரிமைப் பதிலிறுக்கல்: (i) SLFRS 9 இன் நோக்கெல்லைக்கு உட்பட்டு, ஒவ்வொரு அறிக்கையிடற் திகதியிலும் சீர்மதிப்பில் அளவிடப்படுவதும், சீர்மதிப்பில் மாற்றங்கள் அந்த SLFRS இற்கு அமைவாக இலாப நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படுவதும். (ii) SLFRS 9 இன் நோக்கெல்லைக்கு உட்படாது, ஒவ்வொரு அறிக்கையிடற் திகதியிலும் சீர்மதிப்பில் அளவிடப்படுவதும், சீர்மதிப்பில் மாற்றங்கள் இலாப நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படுவதும்.
பந்தி 64 I	2014 செப்டெம்பரில் வழங்கப்பட்ட SLFRS களுக்கான வருடாந்த மேம்படுத்தல்கள் 2014 ஆனது பந்திகள் 40 மற்றும் 58 ஐத் திருத்தியும் பந்தி 67A மற்றும் அதன் தலைப்பை சேர்த்தும் உள்ளது. உரிமமொன்று அந்தத் திருத்தத்தை 2014,யூலை 1 அல்லது அதற்குப் பிந்திய சுவீகரிப்புத் திகதியைக் கொண்ட வியாபார இணைப்புக்களுக்கு அதன்பினனர் நடைமுறைக்கு வரும் வகையில் பிரயோகிக்கும். முந்திய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. SLFRS 9 மற்றும் LKAS 37 ஆகிய இரு நியமங்களும் (SLFRS களுக்கான வருடாந்த மேம்படுத்தல்கள் 2014 இனால் திருத்தப்பட்டவாறு) பிரயோகிக்கப்படும் பட்சத்தில் திருத்தத்தை முன்னைய காலங்களுக்கு பிரயோகிக்க முடியும். ஒரு உரிமம் அந்தத் திருத்தத்தை முந்திய காலத்திற்கு பிரயோகிக்குமிடத்து அந்த உண்மை வெளிக்காட்டப்படும்.
பந்தி 64 J	2014 செப்டெம்பரில் வழங்கப்பட்ட SLFRS களுக்கான வருடாந்த மேம்படுத்தல்கள் 2014 ஆனது பந்தி 2 (a) ஐத் திருத்தியுள்ளது. உரிமமொன்று அந்தத் திருத்தத்தை 2014,யூலை 1 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் வருடாந்த காலங்களுக்கு பிரயோகிக்கும். முந்திய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஒரு உரிமம் அந்தத் திருத்தத்தை முந்திய காலத்திற்கு பிரயோகிக்குமிடத்து அந்த உண்மை வெளிக்காட்டப்படும்.

SLFRS 4 - காப்புறுதி ஒப்பந்தங்கள்

மாற்றம் எதுவும் இல்லை

SLFRS 5 - விற்பனைக்காக வைத்திருக்கும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட தொழிற்பாடுகள்

33 (b) (iv)	LKAS 12 பந்தி 81(k) இல் தேவைப்படுத்தியவாறு தொடர்புபட்ட வருமானவரிச் செலவுகள்.

SLFRS 6 - கனிப்பொருள் வளங்களின் அகழ்வாய்வும் மதிப்பாய்வும்

மாற்றம் எதுவும் இல்லை

SLFRS 7 - நிதிச் சாதனங்கள்: வெளிக்காட்டல்கள் - பின்னிணைப்பு B

மாற்றம் எதுவும் இல்லை

SLFRS 8 - தொழிற்பாட்டுப் பிரிவுகள்

22(aa)	பந்தி 12 இன் ஒன்றுசேர்த்தல் தேர்வு நிபந்தனைகளை பிரயோகிப்பதில் முகாமை மேற்கொண்ட சுயதீர்ப்புக்கள். இது இந்த வகையில் ஒன்றுசேர்க்கப்பட்ட தொழிற்பாட்டுப் பிரிவுகள் பற்றிய சுருக்கமான விபரம் மற்றும் ஒன்றுசேர்க்கப்பட்ட தொழிற்பாட்டுப் பிரிவுகள் ஒத்த பொருளாதார குணாம்சங்களை பங்குகொள்வதை தீர்மானித்தலில் மதிப்பிடப்பட்ட பொருளியற் காட்டிகள் ஆகியவற்றை உள்ளடக்கும்.
28(c)	பிரிவின் சொத்துக்கள் பந்தி 23 இற்கு அமைவாக அறிக்கையிடப்பட்டு இருப்பின், உரிமத்தின் சொத்துக்களில் அறிக்கையிடப்படும் பிரிவுகளின் சொத்துக்களின் மொத்தம்.
பந்தி 36(c)	2014 செப்டெம்பரில் வழங்கப்பட்ட SLFRS களுக்கான வருடாந்த மேம்படுத்தல்கள் 2014 ஆனது பந்திகள் 22 மற்றும் 28 இனை திருத்தியுள்ளது. உரிமமொன்று அந்தத் திருத்தங்களை 2014, யூலை 1 ஆந் திகதியில் அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் வருடாந்த காலங்களுக்கு பிரயோகிக்கும். முந்திய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் அந்தத் திருத்தங்களை முந்திய காலத்திற்கு பிரயோகிக்குமிடத்து அந்த உண்மை வெளிக்காட்டப்படும்.

SLFRS 10 - ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள்

மாற்றம் எதுவும் இல்லை

SLFRS 11 - கூட்டு ஏற்பாடுகள்

மாற்றம் எதுவும் இல்லை

SLFRS 12 - பிற உரிமங்களில் நாட்டங்களை வெளிக்காட்டல்

மாற்றம் எதுவும் இல்லை

SLFRS 13 - சீர்மதிப்பு அளவீடு

52	பந்தி 48 இலுள்ள விதிவிலக்கு, LKAS 39- நிதிச் சாதனங்கள்: ஏற்பிசைவும் அளவீடும் மற்றும் SLFRS 9- நிதிச் சாதனங்கள் ஆகிய நியமங்களின் நோக்கெல்லைக்கு உட்பட்ட நிதிச் சொத்துக்கள், நிதிப் பரிப்புக்கள் மற்றும் பிற ஒப்பந்தங்களுக்கு மாத்திரம் பிரயோகிக்கப்படும். பந்திகள் 48-51 மற்றும் 53-56 இலுள்ள நிதிச்சொத்துக்கள் மற்றும் நிதிப் பரிப்புக்கள் பற்றிய தொடர்புபடுத்தல்கள் LKAS 32- நிதிச் சாதனங்கள்: முன்னிலைப்படுத்தல் நியமத்தின் நிதிச் சொத்துக்களின் அல்லது நிதிப் பரிப்புக்களின் பொருள் வரையறைகளை நிறைவு செய்கின்றனவா எனக் கவனத்திற்கொள்ளாது, LKAS 39 அல்லது SLFRS 9 நியமங்களின் நோக்கெல்லைக்கு உட்பட்ட, அவற்றிற்கு அமைவாக கணக்கிற் கொள்ளப்படுகின்ற சகல ஒப்பந்தங்களுக்கும் பிரயோகிக்கப்படுவதாக வாசிக்கப்படல் வேண்டும்.

SLFRS 13– பின்னிணைப்பு C

C4	2014 செப்டெம்பரில் வழங்கப்பட்ட SLFRS களுக்கான வருடாந்த மேம்படுத்தல்கள் 2014 ஆனது பந்தி 52 ஐத் திருத்தியுள்ளது. உரிமமொன்று அந்தத் திருத்தத்தை 2014, யூலை 1 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் வருடாந்த காலங்களுக்கு பிரயோகிக்கும். உரிமம் அந்தத் திருத்தத்தை SLFRS 13 முதற்தடவையாக பிரயோகிக்கப்படும் வருடாந்த கால ஆரம்பத்திலிருந்து, அதன் பின்னர் நடைமுறைக்கு வரும் வகையில் பிரயோகிக்கும். முந்திய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஒரு உரிமம் அந்தத் திருத்தத்தை முந்திய காலத்திற்கு பிரயோகிக்குமிடத்து அந்த உண்மை வெளிக்காட்டப்படும்.

12-416

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.